**முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம், விழுப்புரம்**

S.C.No. 190-2023

(LW- 1 ) PW - 1

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **வாசுகி** | **மதம்** | |
| **க/பெ** | **ஜெகதீசன்** | **தொழில்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுக்கா** | | **தேதி** | **20.08.24** |

( 20/**08/2024**) **சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.( 2ம் எதிரி ஆஜர், 1ம் எதிரி ஆஜரில்லை, மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்படுகிறது)**

**முதல் விசாரணை**

நான் சேசாங்கனூரில் வசிக்கின்றேன். ஊராட்சி செயலாளராக பணிபுரிகின்றேன். கடந்த 27/01/2012ம் தேதி சேசாங்கனூர் பக்கத்தில் குராம்பாளையம் என்ற ஊரில் 100 நாள் வேலை செய்யும் ஆட்களில் கணக்கை முடித்துவிட்டு என்னுடைய சைக்கிளில் சேசாங்கனூர் நோக்கி வந்துகொண்டிருந்தேன். அப்போது பகல் 03.30 மணியிருக்கும். ஆண்டிப்பாளையம் இடத்தில் நான் வந்துகொண்டிருந்தபோது 2 நபர்கள் இருசக்கர வாகனத்தில் வேகமாக வந்து என்னை மோதுவதுபோல் முந்தி சென்றார்கள். சிறிது தூரம் சென்று இருசக்கர வாகன்ததை நிறுத்திவிட்டு ஒரு நபர் மட்டும் என்னை நோக்கி வந்தார். ஒரு விலாசத்தை சொல்லி வழி கேட்டார். நான் சைக்கிளை விட்டு கீழே இறங்கி நின்ற போது திடிரென்று அந்த நபர் என்னை கீழே தள்ளிவிட்டார். அப்போது அந்த நபர் என் கழுத்திலிருந்த தங்க தாலி சரடு பிடித்து இழுத்தார். அது 4 பவுன் சங்கிலியாகும். நான் கையில் பிடித்துக்கொண்டு அப்போது அந்த நபர் கையிலிருந்த கத்தியால் தாலி சரடை அறுத்து என்னை சத்தம் போடக்கூடாது என்று மிரட்டினார். அப்போது என் கழுத்தில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டது. அந்த நபர் வேகமாக சென்று இருசக்கர வாகனத்தில் புறப்பட்டு சென்றுவிட்டார்கள். இருசக்கர வாகனத்தில் அமர்ந்திருந்த நபர் தலையில் கவசம் அணிந்திருந்தார். ஆஜர் எதிரி அந்த நபரா என்றால் எனக்கு தற்போது அடையாளம் தெரியவில்லை. வழியில் வந்த நபர்களை பார்த்து கத்தியை வைத்திருந்த நபர் அதை காண்பித்து யாரேனும் வந்தால் கத்தியால் தாக்குவேன் என்று மிரட்டல் விடுத்து சென்றார். சம்பவம் குறித்து எனது கணவருக்கு செல்போனில் தொடர்பு கொண்டேன். நடந்த சம்பவம் குறித்து சொன்னேன். நான் வீட்டிற்கு வந்து சற்று ஓய்வு எடுத்து பின்பு கண்டமங்கலம் காவல் நிலையம் சென்று நடந்த சம்பவம் குறித்து புகார் கொடுத்தேன் அந்த புகார் **அதசாஆ-1** . அதன் சம்பவத்திற்கு பின்பு நான் எதிரிகளை

பார்க்கவில்லை. என்னுடைய தாலிசரடும் கிடைக்கவில்லை. இது சம்மந்தமாக போலிசார் விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் வந்த இருசக்கர வாகனம் அப்பச்சி வாகனமாகும். அந்த வண்டியின் அடையாளத்தை புகாரில் சொல்லியுள்ளேன். தலைக்கவசம் என்ன நிறத்தில் அணிந்திருந்தார் என்று சொல்லவில்லை. புகாரில் எதிரிகள் என்ன உடை அணிந்திருந்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு நினைவில்லை. புகாரை நான் தான் எழுதி கையொப்பம் செய்தேன். காவல் நிலையத்தில் வைத்து தான் புகார் எழுதினேன். சம்பவத்தின் போது அங்கிருந்த நபர்களின் விவரத்தை நான் புகாரில் சொல்லவில்லை. நான் சொல்வதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. போலிசார் சொல்லி தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை - இல்லை.</u>**

x

**சாட்சி சொல்ல சொல்ல ஆஜர் எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தமிழில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து செய்யப்பட்டது.**

**ஒப்பம் /என்.எஸ். ஜெயபிரகாஷ்**
**முதன்மை உதவி அமர்வு நீதிபதி,**
**விழுப்புரம்**

முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம், விழுப்புரம்

S.C.No. 190-2023

(LW- 2 ) PW - 2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெகதீசன் | மதம் | |
| த/பெ | ரங்கநாதன் | தொழில் | |
| கிராமம் | | வயது | |
| தாலுக்கா | | தேதி | 20.08.24 |

( 20/08/2024) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்பட்டது. ( 2ம் எதிரி ஆஜர், 1ம் எதிரி ஆஜரில்லை, மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்படுகிறது)

முதல் விசாரணை

நான் சேசாங்கனூரில் வசிக்கின்றேன். நான் விவசாயம் செய்கின்றேன். அசா1 வாசுகி எனது மனைவி. கடந்த 27/01/2012 ம் தேதி எனது மனைவி சேசாங்கனூர் நோக்கி சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது 2 நபர்கள் வழிமறித்து எனது மனைவியின் கழுத்தில் அணிந்திருந்த தங்க தாலி செயினை அறுத்து சென்றுவிட்டதாக போன் மூலம் தகவல் சொன்னார். அந்த நபர்களின் அடையாளம் தெரியவில்லை. சம்பவம் குறித்து எனது மனைவியை அழைத்து சென்று கண்டமங்கலம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். தற்போது வரை எனது மனைவி தங்க சங்கிலி கிடைக்கவில்லை. எதிரிகளை நான் நேரில் பார்த்ததில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் சொல்வதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

x

சாட்சி சொல்ல சொல்ல ஆஜர் எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தமிழில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து செய்யப்பட்டது.

ஒப்பம் /என்.எஸ். ஜெயபிரகாஷ்
முதன்மை உதவி அமர்வு நீதிபதி,
விழுப்புரம்

**முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம், விழுப்புரம்**

S.C.No. 190-2023

(LW- 5 ) PW - 3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | லட்சுமணன் | மதம் | |
| த/பெ | கிருஷ்ணன் | தொழில் | |
| கிராமம் | | வயது | |
| தாலுக்கா | | தேதி | 20.08.24 |

( 20/08/2024) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்பட்டது. (2ம் எதிரி ஆஜர், 1ம் எதிரி ஆஜரில்லை, மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்படுகிறது)

**முதல் விசாரணை**

நான் சேசாங்கனூரில் வசித்து வருகின்றேன். விவசாய வேலை செய்து வருகின்றேன். கடந்த 27/01/2012ம் தேதி பகல் 03.30 மணி அளவில் கண்டமங்கலம் காவல் நிலையத்திலிருந்து போலிசார் வந்து சேசாங்கனூரிலிருந்து ஆண்டிப்பாளையம் செல்லும் வழியில் கிருஷ்ண செட்டியார் என்பவர் நிலத்திற்கு அருகில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மகசர் தயார் செய்து மாதிரி வரைபடம் வரைந்தார்கள். மகசரில் நானும் எங்கள் ஊரைச்சேர்ந்த தீனதயாள் என்பவரும் கையொப்பம் செய்தோம். அந்த பார்வை மகசர் அதசாஆ-2. போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

அசா1 வாசுகி எங்கள் ஊரைச்சேர்ந்தவர் என்றால் சரிதான் அவர் எனது உறவினர் என்றால் சரிதான். பார்வை மகசர் தயார் செய்த அதிகாரியின் பெயர் தெரியாது. போலிசார் வரைபடம் தயார் செய்தபோது பகல் 03.30 மணியிருக்கும். நான் சொல்வதுபோல் போலிசார் சம்பவ இடத்தை பார்வையிடவில்லை என்றும் காவல் நிலையத்தில் வைத்தே நான் கையொப்பம் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

x

சாட்சி சொல்ல சொல்ல ஆஜர் எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தமிழில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து செய்யப்பட்டது.

ஒப்பம் /என்.எஸ். ஜெயபிரகாஷ்
முதன்மை உதவி அமர்வு நீதிபதி,
விழுப்புரம்